**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசுவின் இரண்டாம் வருகை – பாடம் 11

# உபத்திரவம் – 05 – தானியேலின் 70 வாரங்கள்

## இயேசுவின் 70 வாரங்கள்

சீஷர்கள் இயேசுவிடம் வந்து இறுதி காலத்தை பற்றி கேட்டபோது அவர் தன் சீஷர்களுக்கு நான்கு அடையாளங்களை மத்தேயு 24இல் கொடுத்தார்.

**மத்தேயு 24:15,** [15] "மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது "

இயேசு தானியேலை தீர்க்கதரிசி என உண்மைப்படுத்தினார். மேலும் அவருடைய தீர்க்கதரிசனத்தை புரிந்துகொள்ளும் பொறுப்பை நம்மிடையே ஒப்படைத்தார். இதனை நாம் இந்த பாடத்தில் காணலாம்.

**தானியேலின் 9ஆம் அதிகாரம்**

- *தானியேலின் ஜெபம் (1 – 19)*
- *காபிரியேலின் வருகை (20 – 23)*
- *எழுபது வாரங்கள் (24 – 27)*

*கல்தேயருடைய (Chaldeans) ராஜ்யத்தின்மேல் மேதிய (Medes) குலத்தானாகிய அகாஸ்வேருவின் (Ahasuerus) புத்திரனான தரியு (Darius) ராஜாவாக்கப்பட்டான்.*

*தரியு ராஜ்யபாரம்பண்ணுகிற முதலாம் வருஷத்திலே எரேமியா தீர்க்கதரிசி கூறிய தீர்க்கதரிசனத்தை தானியேல் படித்துக்கொண்டிருந்தான். தேவன் பாபிலோனில் பரதேசிகளாக எழுபது ஆண்டுகள் வைப்பார் என்பதை அவர் தெரிந்து கொண்டார்.*

***எரேமியா 25:11-12,*** *[11] இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள். [12] எழுபது வருஷம் நிறைவேறினபின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்தியபாழிடமாக்கி,*

கோரேசு எருசலேமை கைப்பற்றுவதற்கு சில நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஏசாயா தீர்க்கதரிசனமாய் எழுதி இருந்ததைகூட தானியேல் படித்திருந்தார்.

***ஏசாயா 44:26- 45:6,*** [26]நான் என் ஊழியக்காரரின்
வார்த்தையை நிலைப்படுத்தி, என் ஸ்தானாபதிகளின்
ஆலோசனையை நிறைவேற்றி: குடியேறுவாய் என்று
எருசலேமுக்கும், கட்டப்படுவீர்கள் என்று யூதாவின்
பட்டணங்களுக்கும் சொல்லி, அவைகளின் பாழான
ஸ்தலங்களை எடுப்பிப்பவர். [27]நான் ஆழத்தை நோக்கி:
வற்றிப்போ என்றும், உன் நதிகளை
வெட்டாந்தரையாக்குவேன் என்றும் சொல்லுகிறவர்.
[28]கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன்
எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்;
தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும்
சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம்
நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்.
[1]கர்த்தராகிய நான் அபிஷேகம்பண்ணின கோரேசுக்கு
முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின்
இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும், அவனுக்கு
முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளைத்
திறந்துவைக்கும்படிக்கும், அவனைப்பார்த்து, அவன்
வலதுகையைப் பிடித்துக்கொண்டு, அவனுக்குச்
சொல்லுகிறதாவது: [2]நான் உனக்கு முன்னே போய்,
கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.
[3]உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின்

தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு,
[4]வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத்
தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற
பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற
புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என்
தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான்
தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான்
உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை
அறியாதிருந்தும் உனக்கு நாமம் தரித்தேன். [5]நானே கர்த்தர்,
வேறொருவரில்லை; என்னைத்தவிர தேவன் இல்லை.
[6]என்னைத்தவிர ஒருவரும் இல்லையென்று சூரியன்
உதிக்கிற திசையிலும், அது அஸ்தமிக்கிற திசையிலும்
அறியப்படும்படிக்கு நீ என்னை அறியாதிருந்தும், நான்
உனக்கு இடைக்கட்டு கட்டினேன்; நானே கர்த்தர்,
வேறொருவர் இல்லை.

அரணிப்பான பட்டணங்களாயின.

முதலைகள் உள்ள தண்ணீர் வெளிப்புற சுவரை சூழ்ந்துகொண்டது.

ஒரு இரும்பு பாலத்தைக் கிழே இறக்கி தான் மக்கள் அந்த பட்டணத்துக்குள் கடந்து போக முடியும்.

நன்றாக பாதுகாக்கப்பட்டுள்ளது.

எந்த எதிரியும் அந்த பட்டணத்திற்குள் நுழைய முடியாது.

கோரேசு அந்த தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்று பார்த்து அதன் நீர் ஆதாரத்தை சுற்றி பார்த்த பிறகு அவர் அந்த தண்ணீர் விநியோகத்தை நிறுத்தி வைக்கிறார். அந்த நதி வரண்டு போகிறது. படைவீரர்கள் வெறுமனே எந்த ஒரு பிரச்சனையும் இல்லாமல் அணிவகுத்துச் சென்று அந்த பட்டணத்தை கைப்பற்றி விட்டார்கள். இதை நாம் 5 மற்றும் 6ஆம் அதிகாரத்தின் இடையிலே காணலாம். நம்முடைய தானியேல் வேத பாடத்தில் ஒரு விளக்கமான செய்தி நம்மிடையே உள்ளது.

இந்த பின்னனியை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அந்த பட்டணத்தை கட்ட ஒரு ஆணை பிரப்பிக்கபடப்போகிறது. இது 69 வார கடிகாரத்தை துவக்கிவிடும்.

அதனால் இந்த 70 ஆண்டுகள் முடியப்போகும் நேரம் வந்தது என்று தானியேலுக்கு தெரியும். பிறகு அவர் பரிசுத்த பர்வதத்தின் மீது தேவ வெளிபாட்டிற்காக ஊக்கமாக ஜெபம் செய்தார்.

**தானியேல்** 8:15-17, [15]தானியேலாகிய நான் இந்தத் தரிசனத்தைக்கண்டு, அதின் பொருளை அறிய வகைதேடுகையில், இதோ, மனுஷசாயலான ஒருவன் எனக்கு எதிரே நின்றான். [16]அன்றியும் காபிரியேலே, இவனுக்குத் தரிசனத்தை விளங்கப்பண்ணென்று ஊலாயின் மத்தியிலே கூப்பிட்டுச் சொல்லுகிற ஒரு மனுஷ சத்தத்தையும் கேட்டேன். [17]அப்பொழுது அவன்

நான் நின்ற இடத்துக்கு வந்தான்; அவன் வருகையில் நான் திடுக்கிட்டு முகங்குப்புற விழுந்தேன்; அவன் என்னை நோக்கி: மனுபுத்திரனே கவனி; இந்தத் தரிசனம் முடிவுகாலத்துக்கு அடுத்தது என்றான்.

பிறகு அவருடைய ஜெபத்தை காபிரியேல் என்ற தேவதூதன் குறுக்கிட்டு இது இறுதி காலத்துக்குரிய தரிசனம் என்று தானியேலிடம் கூறினார்.

## தானியேலின் "70 வாரங்கள்"

- நோக்கம் 9:24
- 69 வாரங்கள் 9:25
- இடைவெளி 9:26
- 70ஆம் வாரம் 9:27

## நோக்கம் (வசனம் 24)

**தானியேல் 9:24**, "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபதுவாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

யூதர்களே இதன் இலக்கு என்பதை முதலில் முக்கியமுமாக நாம் அறிந்து கொள்ள வேண்டும். சபையையோ புரஜாதியாரோ அல்ல இதன் இலக்கு.

**எரேமியா** *30:7,* ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்

யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் என்பதை அது நன்றாக தெளிவுபடுத்தியுள்ளது.

தரிசனம் மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகிக்க ஆறு காரியங்கள் முடிந்திருக்க வேண்டும்.

**எதிர்மறை**:

1. "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும் "
2. "பாவங்களைத் தொலைக்கிறதற்கும் "
3. "அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும் "

**நேர்மறை**:

4. "நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் "
5. "தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும் "
6. "மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும் "

*எல்லாம் இன்னும் நிறைவேரவில்லை என்பதை நாம் இந்த பட்டியலைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.*

***69 வாரங்கள் 9:25***

***தானியேல் 9:25,*** *இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.*

***நாட்கள்****: 7ஆம் நாளில் ஷாபாத் (ஆதியாகமம் 2:2; யாத்ராகமம் 20:11);*

***வாரங்கள்****: ஏழு வாரங்களின் பண்டிகை (Feast of Weeks) (லேவியராகமம் 23:15,16);*

***மாதங்கள்****: நிசான் (Nisan) முதல் திஷ்ரி (Tishri) வரை (யாத்ராகமம் 12:2; லேவியராகமம் 23:24);*

***வருடங்கள்****: நிலத்திற்கான வருடாந்திர ஓய்வு (Sabbatical Years for the Land) (லேவியராகமம் 25:1-22; 26:33-35; உபாகமம் 15; யாத்ராகமம் 23:10,11; 2 நாளாகமம் 36:19-21).*

*வருடங்களின் வாரங்களை எழுபத்து "ஏழு" (Seventy "Sevens") குறிக்கிறது.*

***69** வாரத்தின் துவக்கப் புள்ளி:*

*எருசலேமை திரும்ப கட்டுவதற்கான ஆணை.*

1. *கோரேசு (Cyrus), 537 கி.மு. எஸ்றா 1:2-4*
2. *தரியு (Darius), எஸ்றா 6:1-5, 8, 12*
3. *அர்தசஷ்டா (Artaxerxes), கி.மு. 458 எஸ்றா 7:11-26*
4. *அர்தசஷ்டா (Artaxerxes), கி.மு. 445 நெகேமியா 2:5-8, 17, 18*

*மேற்கூறிய வேதவாக்கியங்களை படித்தால் முதல் மூன்று ஆணைகளை தேவாலயம் கட்ட பிறப்பித்தார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.*

*யூதர்களிடம் 12 மாதங்களும் மேலும் ஒவ்வொறு மாதத்திற்கும் 30 நாட்கள் உள்ளன. அதனால் அவர்களிடம் ஒரு வருடத்திற்கு 360 நாட்கள் உள்ளன. மாதம் மற்றும் நாட்களைப் பற்றி இயேசு கிறிஸ்துவின் இறுதி வாரம் என்ற வேத பாடத்தில் நாம் படித்தோம்.*

***நிறைவு**: மேசியா (Messiah) இரஜாவைப்போல வருவார்.*

*பட்டணத்தை கட்டுமாறு அர்தசஷ்டா (Artaxerxes) மார்ச் (March) 14ஆம் நாள் கி.மு. 445 இல் கட்டளை அனுப்பினார்.*

| | | |
|---|---|---|
| *69 × 7 × 360* | = | *173, 880 நாட்கள்* |
| *கி.மு. 445 – கி.பி. 32* | = | *173,740 நாட்கள்* |
| *மார்ச் (March) 14 முதல்* | | |
| *ஏப்ரல் (April) 6 வரை* | = | *24 நாட்கள்* |
| *நெட்டாண்டு (Leap years)* | = | *116 நாட்கள்* |
| | | ------------------ |
| | | ***173, 880 நாட்கள்*** |
| *இயேசுவின் வெற்றி பிரவேசம்* | | ***ஏப்ரல் (April) 6 கி.பி. 32*** |

***சகரியா 9:9***, *"சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.*

*இயேசு இராஜாவைப்போல் கழுதையின் மீது அணிவகுத்து வருவார் என்பதை நானூறு ஆண்டுகளுக்கு முன்னேரே தீர்காதரிசனமாக உரைத்துவிட்டனர்.*

எல்லா சுவிசேஷ புத்தகங்களிலும் வெற்றி பிரவேசம் பதிவு செய்யப்பட்டுள்ளது. *(மத்தேயு 21:1-9; மாற்கு 11:1-10; லூக்கா 19:29-39; யோவான் 12:12-16)*

இயேசு இதற்குமுன்னர் யாரும் தன்னை இராஜாவாக அழைக்கவோ அல்லது இராஜாவாக்கவோ விடவில்லை. *(யோவான் 6;15; 7:30 & 44)*

இங்கே மக்கள், *"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக!"* என்று சங்கீதம் 118இல் இருந்து பாடுவதை **லூக்கா 19:38இல்** பதிவு செய்யப்பட்டுள்ளளது.

*அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள்."* **லூக்கா 19:39** ஏன்?

பரிசெயர்களுக்கு இதன் முக்கியத்துவம் தெரியும்!

*அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."* **லூக்கா 19:40**

இயேசு இந்த நாளை அடையாளம் கண்டுகொள்ளும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைத்தார் *(லூக்கா 19:41-44).*

*இது நிசானின் (Nisan) 10ஆம் நாளாகும்.*

*கி.பி. 32ஆம் வருடம் நிசானின் (Nisan) 14ஆம் நாள் பஸ்கா ஆகும்.*

*இயேசு கிறிஸ்துவின் ஊழியம் இலையுதிர் காலத்தில் கி.பி. 28இல் ஆரம்பமானது (திபேரியுவை (Tiberius) கி.பி. 14இல் நியமனம் செய்தனர்.) ஆகஸ்ட் (August) 19, கி.பி. 14இல் அகஸ்டஸ் (Augustus) இறந்தார் (திபேரியுவின் (Tiberius) 15ஆம் ஆண்டிற்குள்) (லூக்கா 3:1).*

***4ஆம் பஸ்கா**: ஏப்ரல் (April) 6, கி.பி. 32*

*தானியேல் இந்த நாளை மிகவும் சரியாக 480 ஆண்டுகளுக்கு முன்னரே துல்லியமாக தீர்க்கதரிசனமாய் உரைத்துள்ளார். நாம் எப்படிப்பட்ட தேவனை கொண்டிருக்கிறோம்.*

***ஏசாயா 46:10**, அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி,'*

*அது அற்புதமானதல்லவா!*

## இடைவெளி

***தானியேல் 9:26,*** *“அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல; நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்; அதின்முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும்; முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது.*

வசனம் *26*க்கு ஒரு இடைவெளி தேவை என்பது தெளிவாகிறது. விவரிக்கப்பட்டுள்ள இந்த நிகழ்வுகள் *69*ஆம் வாரத்திற்கு பிறகும் *70*ஆம் வாரத்திற்கு முன்னரும் நிகழும்.

*அவர் துண்டிக்கப்பட்டது தனக்காக இல்லை மக்களுக்காகவே.*

## இஸ்ரவேலும் சபையும்:

- வெவ்வேறு தோற்றம் *(Different origins),*
- குறிக்கோள் *(Missions),*
- இலக்குகள் *(Destinies).*

தேவனின் திட்டத்தில் இஸ்ரவேலுக்கு இடம் இல்லை என்பதே “மாற்றுக் கோட்பாடின்” *(“Replacement theology”)*

கருத்தாகும் (ரோமர் 9, 10, 11); இது தேவனை பொய்யனாக்குகிறது.

இந்த "70 வாரங்கள்" இஸ்ரவேலை குறித்ததாகவே உள்ளது. யுதர்கள், புறஜாதியார்கள், சபை போன்றவையே பவுலின் மூன்று வெவ்வேறான பிரிவுகள்.

*1 கொரிந்தியர்* ***10:32***, நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள். தனித்துவமானவைகள் வெளி புத்தகத்தின் 4ஆம் அதிகாரத்திற்கு பின் மீண்டும் தோன்றும்.

## எவ்வளவு நேரம் இந்த இடைவெளி?

லூக்கா *19:42* முதல் ரோமர் *11:25* வரை

**லூக்கா *19:42***, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.

**ரோமர் *11:25***, மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரிலொரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.

*இந்த காலவரையையே சபை காலம் என்று கூறுகிறோம். இது பழைய ஏற்பாட்டில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.*

## *70ஆம் வாரம்*

**தானியேல்** *9:27, அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.*

*இந்த இறுதி 7 ஆண்டுகளை நிறைவேற்றியே ஆக வேண்டும். வேதாகமத்தில் மிகவும் ஆவணப்படுத்தப்பட்ட ஆண்டு இந்த இறுதி 7 ஆண்டுகளே ஆகும்.*

*வெளி புத்தகத்தின் 6 முதல் 19 அதிகாரம் வரை படித்தீர்கள் என்றால் இந்த காலத்தைக் குறித்த ஒவ்வொரு விவரங்களையும் நீங்கள் காண்பீர்கள்.*

*69 மற்றும் 70ஆம் வாரத்திற்கு இடையேயான இடைவெளி தொடரும். ஆனால் அது விரைவில் முடிந்து விடும் என்று வெளிப்படையாக தெரிகிறது.*

***மகா உபத்திரவம்:***

*70ஆம் வாரத்தின் ஆரம்பத்தில் மகா உபத்திரவம் துவங்கும்.*

***மத்தேயு 24:21-22,*** *[21] ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். [22] அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.*

*இந்த உபத்திரவம் யாக்கோபுடையது என்றும் சபைக்கானது இல்லை என்றும் தேவன் தீர்க்கதரிசனமாய் கூறியுள்ளார்.*

***எரேமியா 30:7,*** *ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.*

***ஓசியா 5:15,*** *அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப்போய்விடுவேன்; தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள்*

*நீங்கள் தயாராக உள்ளீர்களா?*